# கேடுகெட்ட ஆட்சிக்கு புகைப்படமே சாட்சி!



மதுரை, ஆனையூர் கூடல் புதூரைச் சேர்ந்த 11ம் வகுப்பு மாணவர் தமிழ்ச்செல்வன் மரணத்தை கொலை வழக்காக மாற்றக்கோரி கமிஷனர் அலுவலகத்தை முற்றுகையிடும் போராட்டம் நேற்று நடந்தது. இதில் பங்கேற்ற இளம்பெண்ணை தரதரவென இழுத்தும், மேலே அமர்ந்தும், இரு கால்களால் அப்பெண்ணின் முகத்தை இறுக்கியும் கைது செய்ய முயன்றனர். சாலையில் விழுந்த அவரை பெண் இன்ஸ்பெக்டர் உட்பட போலீசார் கொடூரமான முறையில் கை, கால்களை பிடித்து குண்டுக்கட்டாக தூக்கி சென்றனர்.

## மதுரையில் 11ஆம் வகுப்பு மாணவன் சடலமாக மீட்பு!

# த.வெ.க. ஆட்சியில் கொலைகளில் தமிழ்நாடு முதலிடம்!

### கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. குற்றச்சாட்டு!

சென்னை, செப். 17 -

பொறுப்பற்ற த.வெ.க. அரசில் தமிழ்நாடு கொலைகளில் முதலிடம் வகிப்பதாக கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. குற்றம் சாட்டியுள்ளார்.

மதுரை ஆனையூர் கூடல்புதூர் பகுதியைச் சேர்ந்த 11ம் வகுப்பு மாணவன் தமிழ்ச்செல்வனின் உடல் முட்புதர் குட்டை ஒன்றில் இருந்து சடலமாக மீட்கப்பட்ட சம்பவம் அப்பகுதியில் பெரும் சோகத்தையும் கொந்தளிப்பையும் ஏற்படுத்தியுள்ளது.



உடற்கூறு ஆய்வில் மாணவன் தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டதற்கான தடயங்கள் இருப்பதாகக் கூறப்படும் நிலையில், ஆரம்பத்திலிருந்தே காவல்துறையினர் இதை சந்தேக மரணம் என வழக்குப் பதிவு செய்து மெத்தனப் போக்குடன் செயல்படுவதாக உறவினர்கள் மற்றும் பொதுமக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

இதன் தொடர்ச்சியாக, வழக்கை கொலை வழக்காக மாற்ற வேண்டும், சி.பி.சி.ஐ.டி. விசாரணைக்கு உத்தரவிட வேண்டும் மற்றும் சம்பந்தப்பட்ட விசாரணை அதிகாரியை மாற்ற வேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைத்து "தமிழ்ச்செல்வன் நீதிக்கான கூட்டியக்கம்" சார்பில் மதுரை மாநகர காவல் ஆணையர் அலுவலகம் முற்றுகையிடப்பட்டது. காவல்துறையினர் தடுத்து நிறுத்தியதால் அழகர் கோவில் சாலையில் பொதுமக்கள் மற்றும் உறவினர்கள் தீவிர சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டதால் அப்பகுதியில் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.

போராட்டத்தைக் கலைக்க முற்பட்ட காவல்துறையினர், பெண்கள் உட்படப் பலரை வலுக்கட்டாயமாகத் தரதரவென இழுத்துச் சென்று கைது செய்தனர். குறிப்பாக, போராட்டத்தில் ஈடுபட்ட பெண் ஒருவரை காவல்துறை அதிகாரி கால்களால் மிதித்து அடக்க முயன்றதாகக் கூறப்படும் புகைப்படங்கள் சமூக வலைதளங்களில் வெளியாகி பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்களிடையே பெரும் அதிர்ச்சியையும் கொந்தளிப்பையும் ஏற்படுத்தியுள்ளன.

**கனிமொழி கருணாநிதி கண்டனம்!**

இந்தச் சம்பவத்திற்கு கடும் கண்டனம் தெரிவித்துள்ள தி.மு.க. துணைப் பொதுச்செயலாளரும் எம்.பி.யுமான கனிமொழி கருணாநிதி அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு: -

தமிழ்நாட்டில் கொலைகள் நடைபெறாத நாளே இல்லை என்கிற அளவுக்கு சட்டம் - ஒழுங்கு சீர்கெட்டுக் கிடக்கிறது. ஒவ்வொரு நாளையும் அச்சத்துடனும் அதிர்ச்சியுடனும் மக்கள் கடந்து கொண்டிருக்கிறார்கள். கல்வியில் முதன்மை மாநிலமாக இருக்கும் தமிழ்நாட்டை, கொலைகளிலும் முதலிடத்திற்கு கொண்டு செல்லப் போகிறதா இந்தப் பொறுப்பற்ற அரசு?

சட்டம் ஒழுங்கில் இந்தியாவிலேயே சிறந்த மாநிலங்களில் ஒன்றாக இருந்த தமிழ்நாட்டின் நிலை இன்று எங்கே சென்று கொண்டிருக்கிறது? இது தான் த.வெ.க. சொன்ன மாற்றமா? என்று தி.மு.க. துணைப் பொதுச்செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் கண்டனம் தெரிவித்துள்ளார்.

# மதுராந்தகம் - தாராபுரம் இடைத்தேர்தல் பணிகள்!

### மகளிரணி செயலாளர் ஹெலன் டேவிட்சன் – மகளிர் தொண்டரணி செயலாளர் நாமக்கல் ப.இராணி அறிக்கை!

சென்னை, செப்.17 -

வருகின்ற 06.10.2026 அன்று தேர்தல் நடைபெற உள்ள மதுராந்தகம் மற்றும் தாராபுரம் சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தல் பணி குறித்து, மாநில மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி, மகளிர் பிரச்சார குழு, மகளிர் வலைதள குழு நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் கழக துணை பொதுச்செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்பி அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இதில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் ஆதரவுடன் போட்டியிடும் கழக வேட்பாளர்களை ஆதரித்து நடைபெறும் பிரச்சாரப் பணிகளில், மகளிரணி நிர்வாகிகள் மாவட்ட கழக நிர்வாகிகளுடன் இணைந்து பணியாற்ற மாநில மகளிரணி நிர்வாகிகளைக் கொண்டு கீழ்க்கண்டவாறு குழுக்கள் அமைக்கப்படுகின்றன.

இவர்கள் இவ்விரு தொகுதிகளையும் ஒன்றிய, பேரூர் பகுதிகளாகப் பிரித்து, மகளிர் அணி நிர்வாகிகளைப் பொறுப்பாளர்களாக நியமித்து, தீவிர வாக்கு சேகரிக்கும் பணிகளில் ஈடுபடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**1. மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி**

ஹெலன் டேவிட்சன்
அங்கயற்கண்ணி
சேலம் சுஜாதா
ரத்னா லோகேஸ்வரன்
ராணி ரவிச்சந்திரன்
அமலு விஜயன்
டாக்டர் யாழினி
டாக்டர் மாலதி நாராயணசாமி
தேன்மொழி

**2. தாராபுரம் சட்டமன்றத் தொகுதி**

நாமக்கல் ப. இராணி
தமிழரசி ரவிகுமார்
கயல்விழி செல்வராஜ்.
சத்யா பழனிகுமார்
ரேகா பிரியதர்சினி
மாலதி நாகராஜ்
உமா மகேஸ்வரி
விஜிலா சத்யாநந்த்
ஜெசி பொன்ராணி
ரியா.

ஹெலன் டேவிட்சன், மகளிர் அணி செயலாளர். நாமக்கல் ப.இராணி, மகளிர் தொண்டரணி செயலாளர்.



மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் போட்டியிடும் கழக வேட்பாளர் இ.பரந்தாமன் வருவாய் கோட்டாட்சியர் நரேந்திரன் அவர்களிடம் தனது வேட்பு மனுவை தாக்கல் செய்தார். உடன் சட்டமன்றத் தொகுதி பொறுப்பாளர்களும், மாவட்டச் செயலாளர்களுமான தா.மோ.அன்பரசன் மற்றும் க.சுந்தர், க.செல்வம் எம்.பி. உள்ளிட்ட மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி நிர்வாகிகள் உடன் இருந்தனர்.



சட்டப்பேரவையில் அவை மரபுகளை மீறி உண்மைக்கு மாறான அவதூறுக் கருத்துகளை தெரிவித்த சட்டத்துறை அமைச்சர் நிர்மல் குமாருக்கு எதிராக தி.மு.க. சார்பில் சட்டப் பேரவைத் தலைவர் ஜே.சி.டி. பிரபாகரிடம், முன்னாள் அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் எம்.எல்.ஏ. தலைமையில் உரிமை மீறல் நோட்டீஸ் அளிக்கப்பட்டது. மேலும் அமைச்சரின் பேச்சை அவைக்குறிப்பில் இருந்து நீக்கவும் வலியுறுத்தப்பட்டது. நிகழ்வில் சட்டப்பேரவை தி.மு.க. கொறடா எ.வ.வேலு, சட்டமன்ற உறுப்பினர்கள் வசந்தம் கார்த்திகேயன், காதர் பாட்ஷா முத்துராமலிங்கம் மற்றும் ஈ.ராஜா ஆகியோர் உடனிருந்தனர். சட்டப்பேரவைச் செயலரிடமும், அமைச்சர் நிர்மல்குமாருக்கு எதிராக தி.மு.க. குழுவினர் உரிமை மீறல் கடிதம் கொடுத்தனர்.

### ஓய்வு பெற்ற நீதியரசர் குரியன் ஜோசப் தலைமையிலான – ஒன்றிய – மாநில அரசுகளுக்கு இடையிலான உறவுகள் குறித்து ஆராய அமைக்கப்பட்ட

# உயர்நிலைக் குழுவை முடக்கும் வேலைகளில் ஆளுங்கட்சி இறங்கி இருப்பது கண்டிக்கத்தக்கது!

## சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் வலைதளப் பதிவு!

**சென்னை, செப்.17**

**ஓய்வு பெற்ற நீதியரசர் குரியன் ஜோசப் தலைமையிலான - ஒன்றிய - மாநில அரசுகளுக்கு இடையிலான உறவுகள் குறித்து ஆராய அமைக்கப்பட்ட உயர்நிலைக் குழுவை முடக்கும் வேலைகளில் ஆளுங் கட்சி இறங்கி இருப்பது கண்டிக்கத்தக்கது! என்று சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் விடுத்துள்ள வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.**

**அவரது வலைதளப் பதிவு வருமாறு:-**



ஓய்வுபெற்ற நீதியரசர் குரியன் ஜோசப் தலைமையில் ஒன்றிய - மாநில அரசுகளுக்கு இடையேயான உறவுகள் குறித்து ஆராய்வதற்காக நம் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான அரசால் அமைக்கப்பட்ட உயர்நிலைக்குழுவை முடக்கும் வேலைகளில் ஆளுங்கட்சி இறங்கி இருப்பது கண்டிக்கத்தக்கது.

பணியாளர்கள் பற்றாக்குறையால் இந்தக்குழு தொடர்ந்து செயல்படுவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

இதனால், மாநில சுயாட்சி குறித்த குழுவின் 2-ஆவது ஆய்வு அறிக்கையை தயார் செய்து வந்த ஆய்வாளர்களும் - ஆராய்ச்சி மாணவர்களும் தொடர்ந்து செயல்பட முடியாத சூழலை இந்த Dummy அரசு உருவாக்கி இருக்கிறது.

மாநில உரிமைகள் குறித்து பேசுவதற்கும், போராடுவதற்கும் பயப்படும் த.வெ.க அரசு, அது குறித்து ஆய்வு செய்யவே பயந்து நடுங்கி ஆணையத்தை முடக்குவது வெட்கக்கேடானது.

Reels போட்டால் மட்டும் மாநில சுயாட்சியை நிலைநாட்ட முடியாது என்பதை உணர்ந்து, ஒன்றிய - மாநில அரசுகளின் உறவு பற்றி ஆய்வு செய்யும் உயர்நிலைக்குழு, தொய்வின்றி செயல்படுவதை இந்த அரசு உறுதி செய்ய வேண்டும்.

இவ்வாறு அப்பதிவில் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.



கழக இளைஞர் அணிச் செயலாளர் – எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் மதுராந்தகம் மற்றும் தாராபுரம் சட்டமன்றத் தொகுதிகளுக்கான இடைத்தேர்தலில், கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களின் ஆலோசனையின் பேரில், கழக வேட்பாளர்களை ஆதரித்து நடைபெறும் பிரச்சாரப் பணிகளில் ஈடுபட உள்ள இளைஞர் அணி நிர்வாகிகளையும், இளம் பேச்சாளர்களையும் ஒருங்கிணைக்க உள்ள மாநிலத் துணைச் செயலாளர்களை சந்தித்து ஆலோசனை மேற்கொண்டார்.

### த.வெ.க. ஆட்சியில் நகராட்சி நிர்வாகத்துறையில் டெண்டர் முறைகேடு ஊழல்!

# ஆளுங்கட்சியின் ஊழலுக்கு எதிராக தி.மு.க. களத்தில் இறங்கிப் போராடும்!

### கழக துணை அமைப்புச் செயலாளர் எஸ்.ஆஸ்டின் எம்.எல்.ஏ. வலைதளப் பதிவு!

சென்னை, செப்.17 -

நகராட்சி நிர்வாகத்துறையில் டெண்டர் முறைகேடு ஊழல் குறித்து தி.மு.கழக துணை அமைப்புச் செயலாளர் எஸ்.ஆஸ்டின், எம்.எல்.ஏ., சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

'தொட்டால் விடமாட்டேன் தொடவும் விடமாட்டேன் டேபிள் மேல ஃபைல்ஸ் வச்சு இருக்கேன்' என்று வண்டி வண்டியாக *Reels Dialog* பேசி *Scene* ஓட்டிய டம்மி முதலமைச்சரின் ஆட்சியில், அவரது துறையிலேயே, பணி முடிந்த பிறகு டெண்டர் விடுவது எனும் அரியவகை ஊழல் அம்பலமாகி இருக்கிறது.

தாம்பரம் மாநகராட்சியில் ரூ.45 லட்சம் மதிப்பிலான பணிகளில் டெண்டர் முறைகேடு நடந்திருப்பது தற்போது வெளிச்சத்துக்கு வந்துள்ளது. *Powder* அமைச்சர் சரத்குமார் தாம்பரத்தில் கடந்த ஜூலை மாதமே திறந்து வைத்த *Ashoka Stupa* சிலைக்கு ஆகஸ்ட் மாதத்தில் டெண்டர் விட்டு சாதனை படைத்திருக்கிறது தூய ஆட்சி.

அதுமட்டுமின்றி, சித்தலபாக்கம் ஏரியில் *Save Water* சிலையை ஆகஸ்ட் 10ஆம் தேதி *Powder* அமைச்சர் திறந்து வைத்துள்ளார். ஆனால், அந்தப் பணிக்கான டெண்டர் விண்ணப்பம் சமர்ப்பிக்க ஆகஸ்ட் 24ஆம் தேதி வரை காலக்கெடு இருப்பதாக சொல்லப்பட்டுள்ளது.

ஒரு பக்கம் முதலமைச்சரின் கட்டுப்பாட்டில் உள்ள காவல்துறை, சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட முடியாமல் திணறுகிறது



இன்னொரு பக்கம் முதலமைச்சரின் கீழ் உள்ள நகராட்சி நிர்வாகத்துறை ஊழலில் திளைக்கிறது. இது தான் இவர்கள் சொன்ன மாற்றமா?

தன்னுடைய துறைகளையே சரியாக நிர்வகிக்க வக்கற்ற முதலமைச்சர், தமிழ்நாட்டை எப்படி வளர்த்தெடுப்பார்?

முதலமைச்சரின் துறையில் நடந்துள்ள இந்த ஊழல் முறைகேடு தொடர்பான விசாரணையை லஞ்ச ஒழிப்புத்துறை உடனே தொடங்க வேண்டும்.

இதில் தொடர்புடையவர்கள் யாராக இருந்தாலும், அவர்களுக்கு உரிய தண்டனையைப் பெற்றுத் தர வேண்டும். இல்லையெனில், ஆளுங்கட்சியின் இந்த ஊழலுக்கு எதிராக தி.மு.கழகம் களத்தில் இறங்கி போராடும்.

இவ்வாறு எஸ்.ஆஸ்டின் எம்.எல்.ஏ. பதிவிட்டுள்ளார்.